விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 340 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 08 திங்கட்கிழமை (24.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தாயகம் எங்கும் மாவீரர் வாரம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## 529 மாவீரர்களின் விபரங்களுடன் புதுக்குடியிருப்பில் நினைவாலயம்



15ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையில் நடந்த தமிழின அழிப்பு

# மிகமோசமான மனிதப் பேரவலம்

## இதை மறுப்பவர்கள் கொழும்புக்குத் திரும்ப வேண்டும்
## பிரம்டன் நகர மேயர் பட்றிக் பிரவுண் எச்சரிக்கை



(பிரம்டன்)

இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை அங்கீகரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அதனை இலங்கை உயர்ஸ்தானிகரகம் எதிர்க்கின்றது. இலங்கையில் இனவழிப்பே இடம்பெறவில்லை என்பது போல் சித்தரிப்பதற்கும், வரலாற்றை அழிப்பதற்கும், தமிழர்களின் குரல்களை ஒடுக்குவதற்கும் விரும்புபவர்கள் கொழும்புக்கே திரும்பிச்சென்றுவிடலாமென கனடாவின் பிரம்டன் நகர மேயர் பட்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மழை விடாது பெய்யும்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் சில நாட்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும் வடக்கில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதி

15ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை வினாத்தாள் கசிவா?
### சி.ஐ.டியிடம் முறையீடு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் பொருளியல் விஞ்ஞான வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது எனக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

### முக்கிய குற்றவாளிகளை
## நீண்டகாலம் தடுத்து வைக்க புதிய சட்டம்

(கொழும்பு)

தற்போது பய்ங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு உறுப்பினர்கள் தொடர்பில் குற்றப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவும், நீண்ட காலம் தடுத்து வைப்பதற்குமான புதிய சட்டமூலத்தை சமர்ப்பிக்க

15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு – கிழக்குக் கடலில்
## புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்புத் தீவிரம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட அனைத்து கடலோரப் பகுதிகளில் புலனாய்வு அதிகாரிகளின் பூரண கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட அனைத்து கடலோர மாகாணங்களிலும் பணியாற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியர் துஷ்யந்தி மிகுந்தன் காலமானார்



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மத்திய கல்லூரி நீச்சல் தடாகம்
### அமைச்சர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள டைவிங் நீச்சல் தடாகத்தை சாதாரண நீச்சல் தடாகமாக மாற்றியமைக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே ஆலோசனை கூறியுள்ளார்.

நீண்டகாலமாகப் பராமரிப்பற்ற நிலையில் இருந்த யாழ்.மத்தியகல்லூரியின் நீச்சல்தடாகத்தைப் புனரமை

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

கனடாவின் பிரம்டன் நகரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிக் கொடியை அங்கீகரித்திருப்பதுடன் அதற்கான பிரகடனத்தை பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்துள்ளார். அதற்கமைய நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தமிழீழத் தேசியக்கொடி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் கலந்துகொண்ட பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் உரை நிகழ்த்தியதன் பின்னர் புலிக் கொடியை ஏற்றி வைத்தார். அவர் தனது உரையில் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு,

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளுக்கும், அவர்களது குரல்கள் நசுக்கப்படுவதற்கும் மத்தியில் பிரம்டன் நகரம் தமிழ் மக்களுடன் உடன்நிற்கின்றது.

தமிழர்கள் அவர்களது அன்புக்குரியவர்களை இழந்தனர். துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டதுடன் பல்வேறு வகையிலும் உயிரச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்தனர். இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு, நாம் வாழும் காலத்தில் பதிவான மிக மோசமான மனிதப்பேரவலமாகும். ஆனால் இலங்கையில் இனவழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை இல்லாது செய்வதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் இந்தத் தமிழீழக்கொடி ஏற்றப்படுவதானது தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு தொடர்பான உண்மைகள், அவர்களது கலாசாரம், அடையாளங்கள் என்பன அழிக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்பதைக் காண்பிக்கும் குறியீடாகும்.

அதேபோன்று உள்ளக விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகள் குறித்துப் பேசப்படுகின்றது. ஆனால் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவழிப்பை மூடிமறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றியே போதியளவு பேசப்பட வேண்டும்.

இந்த இனவழிப்புக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அதிலிருந்து தப்பிவிடலாம் எனக் கருதினால், அவ்வாறு தப்பிக்க முடியாது என்பதே சர்வதேச சமூகம் கூறுகின்ற பதிலாகும்.

எமது நகரில் தமிழின அழிப்பு நினைவுத்தூபி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக அரசாங்கத்தின் (இலங்கை) அடிவருடிகள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்தகைய செயற்பாடுகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும். அதுமாத்திரமன்றி இலங்கையில் இனவழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை அங்கீகரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அதனை இலங்கை உயர்ஸ்தானிகரகம் எதிர்க்கின்றது.

இலங்கையில் இனவழிப்பே இடம்பெறவில்லை. என்பது போல் சித்தரிப்பதற்கும், வரலாற்றை அழிப்பதற்கும், தமிழர்களின் குரல்களை ஒடுக்குவதற்கும் விரும்புபவர்கள் கொழும்புக்குத் திரும்பிச்சென்று விடலாம். அதே வேளை தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரம், தமிழின அழிப்பு நினைவுத்தூபி, தமிழீழத் தேசியக்கொடிக்கான அங்கீகாரம் என்பன உள்ளடங்கலாக இவ்விடயத்தில் எட்டப்பட்டிருக்கும் கணிசமானளவு முன்னேற்றம் வரவேற்கத்தக்கதாகும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமிழர் விவகாரம் பலரது அவதானத்தைப்பெறும். அத்தோடு வலிமையுடனும், மீண்டெழும் தன்மையுடனும் தொடர்ந்து குரல் எழுப்பும் பிரம்டன் மற்றும் கனேடிய தமிழ் மக்கள் குறித்துப் பெருமையடைவதுடன் நாம் தமிழீழ மக்களுடன் என்றும் உடன்நிற்போம் என்றார். (ந-7)



யாழ்ப்பாணத்தில் புதிதாக அமையப் பெறவுள்ள உள்ளக விளையாட்டரங்கிற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று பழைய பூங்காவில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

## யாழ். மத்திய...

பதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கிய நிலையில் நேற்றையதினம் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமாரகமகே யாழ். மத்திய கல்லூரிக்கு வந்திருந்தார்.

குறித்த நீச்சல் தடாகம் ஆழம் (17 அடி) கூடிய டைவிங் நீச்சல் தடாகமாக இருப்பதால் அது பொருத்தமற்றது எனக் கூறிய அமைச்சர், டைவிங் நீச்சல் தடாகத்தை சாதாரண நீச்சல் தடாகமாக மாற்றி அனைவரும் பயன்பெற ஏற்பாடு செய்யுமாறும் அவ்வாறு செய்ததும் புனரமைப்புப் பணியை ஆரம்பிக்கலாம் என்றும் கூறி புனரமைப்புப் பணிக்கான நினைவுக்கல்லைத் திரை நீக்கம் செய்யாமல் தவிர்த்தார். (ந-7.33)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
21 - 04 - 1964



இறைவன் அடியில்
23 - 11 - 2025

## திருமதி துஷ்யந்தி மிகுந்தன்
### (யாழ்.பல்கலைக்கழக விவசாய பொறியியல் பேராசிரியை)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் 49/4, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பொறியியல் பேராசிரியை திருமதி துஷ்யந்தி மிகுந்தன் அவர்கள் நேற்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அரவிந்தன், ரகுவிந்தன், வினோவிந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பேராசிரியர் கு.மிகுந்தன் (விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களது பாசமிகு மனைவியும் வைத்தியர் மிதுரிகா (Registrar, NCTH), பொறியியலாளர் துமிலன் (மென்பொறியியலாளர் - WSO2), வைத்தியர் வக்ஷலன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வைத்தியர் திவாகரன் (SR Nephrology, கொழும்பு தேசிய வைத்தியசாலை), மாதங்கி (விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்) வைத்தியர் ஜோகினி (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24.11.2025) திங்கட்கிழமை அமரரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு வைக்கப்பட்டு பின்னர் பி.ப 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

49/4, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(ஒ) 071 847 5539

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 21.04.1964 உதிர்வு 23.11.2025

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட
பேராசிரியர் கு.மிகுந்தன் அவர்களின் அன்பு மனைவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பொறியியல் பேராசிரியர்

## திருமதி துஷ்யந்தி மிகுந்தன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வலம்புரி நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் இப்போது யாழ்ப்பாணத்தில்

உங்கள் நம்பகமான பொறியியல் கூட்டாளர் எப்போதும் இல்லாத அளவுக்கு என்றும் உங்களுடன் அருகில் இருக்கிறார்கள்

Cummins
மின் உற்பத்திகள் & சந்தைப்படுத்தலுக்கு பின்னரான சேவைகள், ஆதரவுகள்

Schindler
Elevators & Escalators

Fleetguard®
வடிகட்டுதல் & போலியில்லாத இயந்திரப் பாதுகாப்பு

LOVOL
கனரக இயந்திரங்கள்

## யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள சேவைகள்

**CUMMINS பிரச்சனைகளுக்கான தீர்வுகள்**

- டீசல் ஜெனரேட்டர்கள் (15–3350 kVA)
- கடல்சார் இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர் செட்
- உத்தரவாத பழுதுபார்ப்புகள் & AMCs
- நம்பகமான உதிரி பாகங்கள்

**Fleetguard வடிகட்டுதல்**

- அதிக வலிமை கொண்ட வடிகட்டிகள்
- மின் உற்பத்தி பிரிவு, போக்குவரத்து & கட்டுமானத்திற்கானவை
- போலிகள் அற்ற Cummins - அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு

**SCHINDLER பிரச்சனைகளுக்கான தீர்வுகள்**

- Elevators & escalators
- Installation support
- Preventive maintenance

**LOVOL கனரக இயந்திரங்கள்**

- Forklifts
- Backhoe Loader
- Excavators
- Wheel loaders
- உத்தரவாதம் மற்றும் சேவைகள்

tpl EXPERIENCE CENTRE

இல. 15, டச்சு வீதி, இருபாலை சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம்


076 197 7151 | 021 781 9200

www.tpl.lk

(C-344)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்து 98 ஆண்டுகள் நிறைவு



கா.இந்திரபாலா

மகாத்மா காந்தியைப் பற்றி அறிந்தோர் பலர். அவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார் என்பதை எத்தனை பேர் அறிவார்கள்? அதுமட்டுமல்ல, இன்று யாழ்ப்பாணத்தில் வசிப்போர் பலருடைய பாட்டன்மார், பாட்டிமார் காந்தியைக் கண்டார்கள், அவர் பேச்சைக் கேட்டார்கள் என்பதை அறிவார்களா?

காந்தி யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் தங்கியிருந்தார். அதில் ஒன்று அவருடைய மௌன விரத நாள். அன்று ஓரிடத்துக்கும் போகவில்லை. ஏனைய மூன்று நாட்கள் முப்பதுக்கும் மேலான ஊர்களுக்குச் சென்று, 14 முக்கிய பாடசாலைகளில் ஆதரவாளர்களைச் சந்தித்துப் பல கூட்டங்களில் உரையாற்றினார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வேறெந்த வெளிநாட்டுப் பிரமுகரும் இவரைப் போன்று பல ஊர்களுக்குச் சென்று மக்களைச் சந்திக்கவில்லை.

கொழும்பில் இருந்து 1927 நவம்பர் 25 வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட மெயில் தொடர்வண்டியில் தொடுக்கப்பட்ட ஒரு 'சலூன்' வண்டியில் காந்தி வடக்கை நோக்கிப் பயணித்தார். காந்தியுடன் பயணித்தோருள் மனைவி கஸ்தூர்பா, ராஜாஜி எனப் பொதுவாக அழைக்கப்பட்ட சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், இவர் மகள் லக்ஷ்மி, காந்தியின் செயலாளர் மஹாதேவ் தேசாய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நள்ளிரவு மெயில் வண்டி அநுராதபுரத்தை அடைந்தபோது, தொடர்வண்டி நிலையத்தில் திருகோணமலையில் இருந்து வந்த ஒரு குழு காந்தியைப் பார்ப்பதற்காக, காந்தியின் கதர் ஆடை நிதிக்குத் தாம் சேர்த்த பணத்துடன் காத்திருந்தது. கிழக்கு மாகாணத்துக்குக் காந்தி செல்லும் திட்டம் இல்லாததால் இவர்கள் இங்கு வந்தனர். காந்தி நித்திரையில் இருந்து எழுப்பப்பட்டார். திருகோணமலைவாசிகளுடன் உரையாடினார்.

**விடியற்காலை பளையில்**


நவம்பர் 26 சனிக்கிழமை விடிந்தபோது பளை நிலையத்துக்கு மெயில் வண்டி வந்தது. அங்கும் ஒரு குழு காந்தியைக் காண்பதற்கு ஆரவாரத்துடன் நின்றது. அவர்களை நோக்கி உரையாற்றிய காந்தி, இரண்டு முக்கிய வேண்டுகோள்களை விடுத்தார். மது அருந்துவதை விலக்குங்கள், தீண்டாமையை ஒழியுங்கள். பளையில் தொடங்கித் தலைமன்னார் வரை தான் சென்ற இடங்களில் எல்லாம் காந்தி வேண்டியது இதுவாகும்.


**யாழ்ப்பாண நிலையத்தில் பெருந்திரள் மக்கள்**

மெயில் வண்டி யாழ்ப்பாண நிலையத்தை வந்து சேருமுன் பெருந்திரளான மக்கள் நிலையத்திலும் சூழ இருந்த தெருக்களிலும் கூடியிருந்தனர். காந்தியும் குழுவினரும் வண்டியில் இருந்து இறங்கியதும் வரவேற்புக் குழுத் தலைவர் வைத்திலிங்கம் துரைசுவாமி காந்திக்கு மலர்மாலை அணிந்து வரவேற்றார். மக்கள் மகிழ்வுற்று எழுப்பிய ஆரவாரத்தின் மத்தியில் காந்தியும் குழுவினரும் மோட்டார் வண்டிகளில் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் இருந்த "தர்ம லக்ஷ்மி வாசா" என்ற இல்லத்துக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர். அவர்கள் தங்குவதற்கு அந்த வீடு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

**முற்றவெளியில் பெருவரவேற்பு**

பிற்பகல் 3 மணிக்கு முற்றவெளியில் வரவேற்புக் கூட்டம். பெருந்தொகையான மக்கள் அங்கு கூடியிருந்தனர். ஒரு செய்தித்தாள் அறிக்கையின்படி, 30,000க்கு மேற்பட்டோர் அங்கு வந்திருந்தனர். வரவேற்புக் குழுத் தலைவர் துரைசுவாமி காந்திக்கு மாலை அணிந்து, தன் வரவேற்புரையை யாழ்ப்பாண மக்கள் சார்பில் வாசித்தார். வேறும் பல குழுக்கள் வரவேற்புரைகளைக் கொண்டுவந்திருந்தனர். அக் குழுக்களுள் தாழ்த்தப்பட்டோருடைய இரு சங்கங்கள் இருந்தன. இவ் வரவேற்புரைகள் காந்திக்குக் கையளிக்கப்பட்டன. அதன்பின் காந்தி தன் உரையை வழங்கினார்.





இதன் பின் காந்திக்கும் குழுவினர்க்கும் "வீட்டு உபசாரம்" (அந்த நாட்களில் "At Home" எனப்பட்ட வைபவம்) துரைசுவாமி தம்பதிகளால் வழங்கப்பட்டது. இதற்கு அரசாங்க அதிபர் உட்படப் பல யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

**மாணவர் சபையின் வரவேற்பு**

மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண நகரத்தின் றோயல் தியேட்டரில் மாணவர் காங்கிரஸின் பெருவரவேற்பு நடைபெற்றது. இதற்கு சுவாமி விபுலானந்தர் தலைமை தாங்கினார். மாணவர் காங்கிரஸின் முதலாவது குறிக்கோள் தங்கள் தொன்மையான பண்பாட்டை மறுமலர்ச்சி அடையச்செய்வது எனத் தலைவர் கூறியதைப் பொருளாக வைத்து மாணவருக்குச் சில அறிவுரைகளைக் காந்தி வழங்கினார்.

சிறப்பாக, ஒழுக்க நெறிகளுக்கு ஒவ்வாத மூடநம்பிக்கைகளையும் தப்பெண்ணங்களையும் பண்பாட்டின் பெயரால் திரும்பவும் தழுவுவதோ தீண்டாமை போன்ற தவறான வழக்கங்களை நியாயப்படுத்துவதோ ஏற்கக்கூடியவை அல்ல என்பதைக் காந்தி வற்புறுத்தி "பழைய பண்பாட்டை மீண்டும் மலர வைக்கும் பெயரால் தவறானவற்றைச் செய்யும் வழியில் செல்ல வேண்டாம்", என எச்சரித்தார்.

**நவம்பர் 27 ஞாயிறு**

இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை வேறெந்த வெளிநாட்டுப் பிரமுகருக்கும் கிட்டாத வரவேற்பு யாழ்ப்பாணத்தில் காந்திக்குக் கிடைத்தது. அவர் நகரத்தில் மட்டுமல்ல, ஊர்ப்புறங்களிலும் பெருந்தொகையான பாடசாலை மாணவர்களைச் சந்தித்தார் ஊர்ப்புறப் பொதுமக்கள் பெருந்திரளாக அவரைக் காண வந்தனர்.

முதலில் காந்தி குழுவினர் திருநெல்வேலிக்குச் சென்றனர். அங்கு பரமேஸ்வராக் கல்லூரியில் வரவேற்பு. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம அலுவலகமும் இராமநாதன் மண்டபமும் அமைந்துள்ள நிலத்தில் இந்திய விடுதலை இயக்கத்தின் இரண்டு முக்கிய முன்னணிப் போராளிகளாகிய காந்தியும் ராஜாஜியும் காலடி வைத்தனர். ஒரு வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த நிகழ்வு இடம்பெற்றது. அவர்களுடன் கூடவே கஸ்தூர்பா காந்தியும் ராஜாஜியின் மகள் லக்ஷ்மியும் இதில் பங்குகொண்டனர்.

கல்லூரி அதிபரும் பொன்னம்பலம் இராமநாதனுடைய மருமகனுமான சு. நடேசபிள்ளை காந்தியை வரவேற்றுக் கல்லூரியின் சார்பில் காந்தியின் கதர் நிதிக்கு ஒரு பணப்பையையும் கொடுத்தார்.

திருநெல்வேலியில் இருந்து காந்தி குழுவினர் வண்ணார் பண்ணைக்குச் சென்று அங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு வரவேற்பில் பங்குகொண்டனர். அது முடிந்ததும், மானிப்பாய் இந்துக் கல்லூரி, கந்தரோடை இந்து ஆங்கில நிறுவனம் (Hindu English Institute - இன்றைய ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகிய பாடசாலைகளுக்குச் சென்றனர்.

இதன்பின், சுன்னாகத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை கட்டுவதற்குக் காந்தி அடிக்கல் நாட்டினார். அக் கல்லில் "காந்தி அடிகள் சக 1850" எனப் பொறிக்கப்பட்டிருந்தது.

இதை அடுத்துச் சுன்னாகச் சந்தையில் ஒரு வரவேற்பு நடந்தது. இது முடிந்ததும் காந்தி குழுவினர் பருத்தித்துறையை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, வல்லிபுரக் கோவில் ஆகிய இடங்களில் வரவேற்புக்களில் பங்குகொண்டபின் சாவகச்சேரிக்குச் சென்றனர். இங்கும் ஒரு வரவேற்பு நடைபெற்றது.

**மௌனவிரதம்**

நவம்பர் 28 திங்கள்கிழமை மூன்றாம் நாள் காந்தியின் மௌன விரதம். ஞாயிறு இரவு 9:30 தொடக்கம் திங்கள் இரவு 9:30 வரை மௌனம். இவ் விரதம் முடிந்ததும், காந்தியின் அடிமுன் சில இளைஞர்கள்-சைவர்களும் கிறிஸ்தவர்களும் - உட்கார்ந்து வினாக்களைக் கேட்டு விடைகளைப் பெற்றனர்.

**நாலாம் நாள்**

நவம்பர் 29 செவ்வாய்க்கிழமை. இறுதி நாள். காலையில் காந்தி ஏழு முக்கிய கல்லூரிகளுக்குச் சென்றார் - சுண்டிக்குளி சாந்த யோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் பாடசாலை, உடுவில் மகளிர் பாடசாலை, தெல்லிப்பளை நெசவுப் பாடசாலை மற்றும் இராமநாதன் மகளிர் கல்லூரி.

பிற்பகல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வரவேற்பு, ஊர்காவற்றுறையில் தீவுப்பகுதிப் பொதுமக்கள் வரவேற்பு, காரைத்தீவில் சைவ மகாசபை வரவேற்பு, மூளாய் சித்திவிநாயகர் கோவில் வரவேற்பு. இதைத் தொடர்ந்து மூளாய்-தொல்புரம் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை அமைப்பதற்குக் காந்தி அடிக்கல் நாட்டினார்.

பின்னர் சுழிபுரம்-சங்கானை மக்களுடைய வரவேற்பு விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெற்றது. இறுதியாக, வட்டுக்கோட்டை இந்து-ஆங்கிலப் பாடசாலையில் (இன்றைய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி) வரவேற்பு முடிந்ததும் காந்தி குழுவினர் யாழ்ப்பாணம் தொடர்வண்டி நிலையத்துக்குப் புறப்பட்டனர். அங்கு காத்திருந்த மக்களுக்குத் தன் பிரியாவிடை உரையை வழங்கியபின், 6:15க்குப் புறப்பட்ட தொடர்வண்டியில் யாழ்ப்பாணத்தை விட்டு, தலைமன்னார் வழியாக இந்தியாவுக்குத் திரும்பும் பயணத்தைத் தொடங்கினார்.

மூன்று நாட்களில் மகாத்மா காந்தி யாழ்ப்பாணத்தில் முப்பதுக்கு மேற்பட்ட ஊர்களுக்குச் சென்று, 14 பிரபல பாடசாலைகளில் உரையாற்றியிருந்தார். யாழ்ப்பாண வரலாற்றில் இவர் வருகை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் -2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்கள், உபகரணங்களை விநியோகிப்பதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், வழங்குநர்களிடமிருந்து 2026 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான படிவங்கள், நிபந்தனைகள் உள்ளடங்கிய ஆவணங்களை நேரடியாக மாநகரசபையின் பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும்.

| குறி. இல | பொருட்கள் / உபகரணங்கள் | குறி. இல | சேவைகள் |
|---|---|---|---|
| G1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் | S1 | விளம்பரப் பலகைகள் அமைத்தல் |
| G2 | அலுவலக தளபாடங்கள் (இரும்புருக்கு, மரம், பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ்) | S2 | அனைத்து அச்சிடுதல், புத்தகம் கட்டுதல் நடவடிக்கைகள் |
| G3 | ஆயுர்வேத / சுதேச மருந்து வகைகள், மருந்துச் சரக்குகள், மருத்துவ உபகரணங்கள் | S3 | ஏற்றியிறக்கும் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல் |
| G4 | சித்த மருத்துவ மருந்துகள் | S4 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| G5 | சமைத்த உணவு, குளிர்பானம், சிற்றுண்டி, பேக்கரி உணவுப் பொருட்கள் | S5 | ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| G6 | மென்பானங்கள், பால், பால்மா வகைகள், தேயிலை, சீனி, வேறு உணவுப் பொருட்கள் சம்பந்தமானவை | S6 | சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல் |
| G7 | கோலவுடைத் துணிகள், யன்னல் திரைச்சீலைத் துணிகள், நிலவிரிப்புப்படுக்கை, மேசை விரிப்புக்கள், தலையணை உறைகள், மெத்தைகள், மழை அங்கிகள், கால் மிதிகள் | S7 | கணனிகள், பிறின்ரர்கள், ஸ்கானர்கள், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரங்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G8 | பாதணிகள், தோற்பொருட்கள் | S8 | மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல் |
| G9 | கட்டிட வேலைக்கான மூலப்பொருட்கள் . (சீமெந்து, ஓடு, கூரைத்தகடு, சீலிங், கம்பி வகைகள் முதலியன) | S9 | மின் உபகரணங்கள், மின் இணைப்புப் பொருட்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G10 | தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன | S10 | இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல் |
| G11 | செரமிக் பொருட்கள் | S11 | வளிச்சீராக்கி திருத்தம், பராமரிப்பு சேவைகள் |
| G12 | கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள்கள், மணல், ABC கலவை | S12 | வாகனங்கள் பழுதுபார்த்தல் - உள்வாரியான திருத்தம் இயந்திரம் மற்றும் வாகனப் பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள் |
| G13 | நீர்வழங்கு பொருட்கள், PVC குழாய்கள், நீர்த்தாங்கி, நீர்ப்பம்பிகள் | S13 | வாகனங்கள் பழுதுபார்த்தல் - வெளிவாரியான திருத்தம் தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும் |
| G14 | வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள் | S14 | வாகனம் பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் (Maintenance & Service) |
| G15 | வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன | S15 | வாகனங்களுக்கான wiring / Electrical works |
| G16 | எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ் | S16 | வாகனங்களுக்கான A/C திருத்தம் |
| G17 | இரும்புப்பொருட்கள் | S17 | வாகனங்களுக்கான குசன் வேலைகள், தள விரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் |
| G18 | பொருத்துகைப் பொருட்களும், கண்ணாடி வகைகளும் | S18 | போட்டோ பிரதி இயந்திரங்கள் பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் |
| G19 | விறகு, தேங்காய் மட்டை, கிடுகு, சாக்கு | S19 | CCTV கமரா, அதனுடன் தொடர்புடைய பொருட்கள் திருத்தம், பராமரிப்பு சேவைகள் |
| G20 | தீராந்திகள், றீப்பைகள், பலகைகள், பனை மரங்கள், சலாகைகள் | S20 | கணனி மென்பொருள் வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தல் |
| G21 | தீயணைப்புச் சேவைகளுக்குத் தேவையான பொருட்கள் / உபகரணங்கள் | S21 | கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துதல் |
| G22 | மின்சார இணைப்புப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள், வீதிவிளக்குகள் | S22 | தனியார் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் பிரித்தெடுப்பு சேவை வழங்கல் |
| G23 | மேசன் வேலைக்குத் தேவையான உபகரணங்கள் | S23 | தனியார் பாதுகாப்பு சேவை வழங்குதல் |
| G24 | தச்சு வேலைக்குத் தேவையான உபகரணங்கள் | S24 | திரவக்கழிவு பரிகரிப்பு தொகுதியை முகாமை செய்தல் |
| G25 | வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, கோடாரி, கத்தி, சவள்) | S25 | சேதனப்பசளை உருவாக்கல், பொதியிடல், சந்தைப்படுத்தல் |
| G26 | வெல்டிங், ரிங்கரிங் தொடர்பான பொருட்கள் | S26 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| G27 | விளையாட்டு உபகரணங்கள், பொருட்கள் | S27 | வாடகைக்கு வாகனங்களை வழங்குதல் |
| G28 | நூலகங்களுக்குரிய நூல்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள் | S28 | கோலவுடைகள், திரைச்சீலைகளை தைத்து வழங்குதல் |
| G29 | தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கயிறு வகைகள் | S29 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| G30 | சுத்திகரிப்புப் பொருட்களும், கிருமிநாசினிகளும் | S30 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| G31 | கணனி, போட்டோ பிரதி இயந்திரம், தொலைநகல் மற்றும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், ரோணர்கள், றிபன்கள் வழங்கல் | S31 | வீதி வேலை, கட்டட நிர்மானம், பூங்கா/ மைதானம் பராமரிப்பு, கனரக வாகனங்கள் கையாளல் ஆகியவற்றிற்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்குதல் |
| G32 | குடிநீர் சுத்திகரிப்புக்குத் தேவையான குளோரின் | S32 | உள்ளக தொலைபேசி (Intercom) திருத்தமும், பராமரிப்புச் செய்தலும் |
| G33 | CCTV கமரா, Web கமரா மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் | S33 | தீயணைப்புக் கருவிகள் திருத்தமும், பராமரிப்புச் செய்தலும் |
| G34 | வெற்று பரல்கள் | S34 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு சேவைகள் வழங்குதல் |
| G35 | தார் | S35 | மீள்சுழற்சிக்கு உள்ளாக்கக்கூடிய திண்மக் கழிவுகளை மீள்சுழற்சியாளர்களிடம் எடுத்துச்சென்று சந்தைப்படுத்தல் |
| | | S36 | நாளாந்த அடிப்படையில் பயிற்றப்படாத பணியாளர் சேவை வழங்குதல் |
| | | S37 | தங்குமிட சேவைகளை வழங்குதல் |

வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2026 இற்கான படிவங்களை **24.11.2025** ஆம் திகதி முதல் **23.12.2025** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ் மாநகரசபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 1000/- மற்றும் வரிகள் (VAT 18%) உள்ளடக்கியதாக காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையினை "ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு பெறப்பட்டு

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்
- வியாபாரப் பதிவுச் சான்றிதழின்/ நிறுவனப் பதிவுச் சான்றிதழின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதி
- மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை வரிப்பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- பெறுமதி சேர் வரிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (ஏற்புடையதாயின்)

**ஆகியவற்றையும் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் "முன்னரங்கு அலுவலகத்தில்" நேரடியாக கடமை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை செலுத்த முடியும்.**

**கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள், சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவு புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.**

விண்ணப்பங்கள் யாவும் அவற்றுக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2026" எனக் குறிப்பிட்டு நேரடியாக/ "ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். **23.12.2025 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**

**முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்**

(C-4401)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் அமைதித்திட்டம் ஏற்காவிடின் விளைவு விபரீதமாகும்!

## ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை

**(மொஸ்கோ)** ••••••••••••••••••••••••••••••

**ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்மொழிந்துள்ள 28 அம்ச திட்டம் இரு நாடுகளுக்கு இடையே அமைதியை ஏற்படுத்தும் என்றும், உக்ரைன் இதை ஏற்க மறுத்தால் மேலும் பல பகுதிகளை ரஷ்யா கைப்பற்றும் என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்துள்ளார்.**



நடவடிக்கை கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான போர் 4 ஆண்டுகளை எட்ட உள்ளது.

இந்நிலையில் இப்போரை நிறுத்த உலக நாடுகள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாய்ப் போனது.

இதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேரடியாக அழைத்து போரை நிறுத்துவதற்காக பேச்சு நடத்தினார்.

ஆனால், பல மாதங்கள் கழிந்தும், இந்த விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாய் எந்த முன்னேற்றமுமின்றி அப்படியே இருந்தது. இதையடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையில் எடுத்தார்.

ரஷ்யாவை பணிய வைக்க, அதனிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது கடுமையான வரியை அறிவித்தார். இருந்தாலும், ரஷ்யா மசிந்து கொடுக்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக, மேற்காசிய நாடான இஸ்ரேல் - ஹமாஸ் போரை நிறுத்துவதற்கு முன் மொழியப்பட்ட அமைதி திட்டம் போன்று, ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்துவதற்கான 28 அம்ச அமைதித் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, அமெரிக்கா முன்வைத்துள்ள, இந்த 28 அம்ச சமாதான திட்டத்தை போர் நிறுத்தத்திற்கான தொடக்க புள்ளியாக ஏற்றுக் கொள்வதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

ஆனால், உக்ரைன் இந்த சமாதானத் திட்டத்தை ஏற்க மறுத்தால், ரஷ்ய படைகள் தொடர்ந்து முன்னேறும் எனவும் குபியான்ஸ்க் நகரை கைப்பற்றியது போல் மற்றைய முக்கிய பகுதிகளையும் கைப்பற்றுவோம் என புடின் வெளிப்படையாக அச்சுறுத்தியுள்ளார்.

எதிர்ப்பு ட்ரம்பின் சமாதான திட்டத்தில் ரஷ்யாவின் நீண்டகால கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிபந்தனைகள் இடம்பெற்றுள்ளதால், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தன்னுடைய மதிப்பை இழக்க நேரிடும் எனவும், இந்த சமாதான ஒப்பந்தத்தை ஏற்க வலியுறுத்தினால், நீண்டகால நட்பை அமெரிக்கா இழக்க நேரிடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் நலன்களுக்கு துரோகம் இழைக்காத மாற்று திட்டங்களை முன்வைக்க விரும்புவதாக அவர் உறுதியளித்து உள்ளார்.

மேலும், இந்த முன்மொழிவு ஐரோப்பிய நாடுகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இது ரஷ்யாக்கு சாதகமாக இருப்பதாகவும், உக்ரைனின் இறையாண்மையையும், பரந்த பாதுகாப்பையும் பலவீனப்படுத்தக்கூடும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இந்நிலையில், இந்த சமாதானத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதிலளிக்குமாறு ட்ரம்ப் நிர்வாகம் உக்ரைனை வலியுறுத்தி உள்ளது. (நி)

---

## பாரிஸ் அருங்காட்சியகத்தில் டயானாவின் மெழுகுச்சிலை

### பார்வையிடத் திரண்ட மக்கள்



(பாரிஸ்)

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள பிரபலமான அருங்காட்சியகத்தில் மறைந்த பிரித்தானிய இளவரசி டயானாவின் மெழுகுச்சிலை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பாரிஸில் 1997 ஆம் ஆண்டு நடந்த விபத்தில் உயிரிழந்த டயானாவின் 28 ஆண்டுகளை நினைபடுத்தும் முகமாக அவரது உருவச்சிலை மெழுகில் செய்யப்பட்டுள்ளது.

மெழுகுச்சிலை டயானாவின் வாழ்க்கை மற்றும் சமூக பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையை வடிவமைக்க ஒராண்டுக்கும் மேலானது. மெழுகுச்சிலை தத்துருவமாக உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த சிலையின் உடைமைகள் மற்றும் ஆடை முறைகள் விரிவாக பிரதிபலிக்கப்படுகின்றன.

மக்கள் இந்த மெழுகுச்சிலையைப் பார்வையிட பாரிஸ் மியூசியத்திற்கு ஆர்வமாக வருகை தருகின்றனர். (நி)

---

## ஜப்பானுக்கு பதிலடி கொடுப்போம் ஐ.நாவுக்கு சீனா பரபரப்புக் கடிதம்





(பீஜிங்)

தாய்வானை சீண்டினால் சீனாவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என ஜப்பான் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜப்பானுக்கு தங்களுடைய மக்கள் யாரும் செல்ல வேண்டாம் என சீனா அறிவுறுத்தியது.

தாய்வானை தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியென கூறி போர் விமானங்களை பறக்கவிட்டும், போர்க் கப்பல்களை களம் இறக்கியும் சீனா அச்சுறுத்தி வருகிறது.

ஜப்பான் பிரதமர் சனே தகைச்சி, தாய்வானை சீண்டினால் சீனாவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்தார்.

இதனால் வெகுண்டெழுந்த சீனா, ஜப்பானின் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்தது.

அந்த நாட்டிற்கு தங்களுடைய மக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மேலும் அறிவுறுத்தியது.

இந்நிலையில், தாய்வான் விவகாரத்தில் இராணுவ தாக்குதல் நடத்த ஜப்பான் துணிந்தால், உறுதியான பதிலடி கொடுப்போம் என எச்சரிக்கை விடுத்து ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோவுக்கு சீனா கடிதம் எழுதியுள்ளது.

தாய்வானை கைப்பற்ற சீனா, இராணுவ நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக எதிர்வினை ஆற்றுவோம் என ஜப்பான் பிரதமர் தகைச்சி கூறியிருந்த நிலையில், அந்த கருத்துக்கள் இராணுவ அச்சுறுத்தலுக்கு சமம் என கவலை தெரிவித்து ஐ.நா விடம் சீனா முறையீடு செய்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செக் குடியரசில்

# நேருக்கு நேர் மோதிய ரயில்கள்

### 57 பேர் படுகாயம்



(செக்குடியரசு)

ஐரோப்பிய நாடான செக் குடியரசில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 57 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

செக் குடியரசின் பிளென் நகரில் இருந்து பயணிகள் ரயில் ஒன்று புறப்பட்டு செஸ்கே புடெஜோவிஸ் நோக்கிப் பயணித்தது. அந்த ரயில் தனது இலக்குக்கு அருகில் சென்றபோது, அதே ரயில் மார்க்கத்தில் வந்த மற்றொரு ரயில் நேருக்கு நேர் மோதியது.

இந்த திடீர் மோதலில் பயணிகள் பலர் படுகாய மடைந்தனர். மீட்பு குழுவினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காயமடைந்த 57 பேரையும் வைத்தியசாலைகளில் அனுமதித்தனர். அவர்களுக்கு தற்போது சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

விபத்தில் சேதமடைந்த ரயில் பெட்டிகளை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த விபத்தின் தாக்கத்தால் செஸ்கே புடெஜோவிஸ் - பிளென் இடையேயான ரயில் சேவை பல மணி நேரம் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

விபத்திற்கான காரணம் குறித்து செக்குடியரசி? அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

## பாரம்பரிய அறிவுக் களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டும்

### ஜி- 20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி




(ஜோகன்னஸ்பர்க்)

உலக வளர்ச்சிக்கான அளவுகோல்களை மறுபரிசீலனை செய்வதற்கான சரியான நேரம் இது. அனைவரையும் உள்ளடக்கிய, நிலைத்து நிற்கும் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ஜி-20 உச்சி மாநாட்டில் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போதைப்பொருளும் பயங்கரவாதமும் பொருளாதாரத்தை பலவீனப்படுத்துகின்றன. அதனால், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்க்கும் ஒருங்கிணைந்த ஒரு முயற்சி தேவை. மேலும் சில யோசனைகளும் உள்ளன. அதில் ஒன்று ஜி- 20 கீழ் உலக பாரம்பரிய அறிவு களஞ்சியம் உருவாக்குவது. இதில், இந்தியாவுக்கு பெரும் வரலாறு உள்ளது.

இது நம் ஒட்டுமொத்த அறிவை அடுத்த தலைமுறையின் ஆரோக்கியத் திற்கும், நல்வாழ்விற்கும் கொண்டு செல்ல உதவும் என அவர் தெரிவித்தார். (நி)

## " ஆப்பரேஷன் சிந்தூரை" தனக்கு சாதகமாக்கியது சீனா!

### அமெரிக்க பாராளுமன்றம் அறிக்கை



(வோஷிங்டன்)

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த மே மாதம் நடந்த மோதலை, சீனா தன் ஆயுதங்களை சோதிப்பதற்காக பயன்படுத்தி கொண்டதாக அமெரிக்கப் பாராளுமன்ற குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் ஜம்மு - காஷ்மீரில் உள்ள சுற்றுலா தலமான பஹல்காமில், கடந்த ஏப்ரல் 22 இல் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலா பயணியர் உட்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலுக்கு நம் அண்டை நாடான பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாத அமைப்பின் ஆதரவு அமைப்பான, "தி ரெசிஸ்டன்ஸ் பிரன்ட" பொறுப்பேற்றது.

இத்தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாதிகளின் நிலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மீது குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தியது.


"ஆப்பரேஷன் சிந்தூர்" என்ற பெயரில், கடந்த மே 7 முதல் 10 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் நடந்த இந்த மோதலை, நம் மற்றொரு அண்டை நாடான சீனா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டதாக அமெரிக்க பாராளுமன்றக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான மோதலை, சீனா தன் புதிய மற்றும் மேம்பட்ட ஆயுத அமைப்புகளுக்கு சோதனைக் களமாகவும், விளம்பர மேடையாகவும் பயன்படுத்திக் கொண்டது. இந்த மோதலின்போது பாகிஸ்தான், சீனாவிடம் இருந்து வாங்கிய ஆயுதங்கள் மற்றும் உளவுத் தகவல்களை பெருமளவில் பயன்படுத்தியது.

போலி சமூக வலைத்தளம் சில நவீன சீன தயாரிப்புகள் முதன் முதலாக இப்போரில் பயன்படுத்தப்பட்டன. அதில், எச்.க்யூ., -9 வான் பாதுகாப்பு அமைப்பு, பி.எல்., -15 ஏவுகணை, ஜே-10சி போர் விமானங்கள் குறிப்பிடத்தக்கவை. (நி)

# புதிய சாதனை படைத்த டைட்டானிக் பயணியின் தங்க கடிகாரம்



(லண்டன்)

டைட்டானிக் கப்பல் விபத்தில் உயிரிழந்த பெரும் பணக்காரப் பயணியொருவரின் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட தங்கக் கைக் கடிகாரம் ஏலத்தில் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

இந்த கைக்கடிகாரமானது 1.78 மில்லியன் பவுண்ஸ்களுக்கு விற்பனையாகியுள்ளது.

குறித்த கடிகாரம் ஐசிடோர் ஸ்ட்ரஸ் என்பவருக்குச் சொந்தமானதாகும். இவர் அமெரிக்காவின் பிரபல "மேசிஸ்" அங்காடியின் இணை உரிமையாளரும், அரசியல்வாதியும் ஆவார்.

1912 ஏப்ரல் 14 அன்று டைட்டானிக் கப்பல் பனிப்பாறையில் மோதி மூழ்கியதில் உயிரிழந்த 1,500 பேரில் இவரும் இவரது மனைவி ஐடாவும் அடங்குகின்றனர்.

கப்பல் மூழ்கிய இரவு, ஐசிடோரின் மனைவி ஐடா கணவரைப் பிரிந்து செல்வதை விட, "அவருடனேயே இறப்பது மேல்" என அவர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதலின் போது ஐடா ஸ்ட்ரஸின் உடல் கிடைக்கவில்லை என கூறப்படுகின்றது.

விபத்துக்குப் பின் சில நாட்களில் அட்லாண்டிக் கடலில் மீட்கப்பட்ட ஐசிடோரின் சடலத்திலிருந்து இந்த 18 கரட் தங்கக் கடிகாரம் கண்டெடுக்கப்பட்டது.


அவற்றில் அவரது ஜுல்ஸ் ஜுர்கென்சன் கடிகாரம் டைட்டானிக் மூழ்கியதாக நம்பப்படும் நேரமான அதிகாலை 2.20 மணிக்கு நிறுத்தப்பட்டதாகவும் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஐசிடோர் ஸ்ட்ரஸ்க்கு செந்தமான கைக்கடிகாரமானது 1.78 மில்லியன் பவுண்ஸ்களுக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

ஏலத்தில் கைக்கடிகாரம் தவிர ஐடா கப்பலில் இருந்தபோது எழுதிய கடிதம் ஒன்றும் 100,000 பவுண்ஸ்களுக்கும், டைட்டானிக் பயணிகள் பட்டியல் 104,000 பவுண்ஸ்களுக்கும் விற்பனையாகின. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முகமட் சுல்தான் நஜீமினால் போதைப் பொருள் கட்டுப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக வர்த்தகர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்தவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

அத்துடன் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் க்ளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் சிரமதானப்பணியும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது. (8-316)

# மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு



(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு தாயக உறவுகளுக்கு கைகொடுக்கும் இலக்கியா தென்றல் அமைப்பின் ஏற்பாட்டில், கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி-கிராஞ்சிப் பிரதேசத்தில் மாவீரர்களுடைய பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

வடக்கு கிழக்கு தாயக உறவுகளுக்கு கைகொடுக்கும் இலக்கியா தென்றல் அமைப்பின் வடக்கு இணைப்பாளர் தயானந்தன் ஜெயசித்ரா தலைமையில் இடம்பெற்ற மதிப்பளிப்பு நிகழ்வில், பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-30)

# பருத்தித்துறையில் விபத்து மாணவன் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற விபத்தில் பரீட்சைக்கு தோற்றிவிட்டு வீடு திரும்பிய மாணவர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிவிட்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவன் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந் நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.(8-60)

# கட்டைக்காட்டில் மினி சூறாவளி



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீசிய மினி சூறாவளி காரணமாக வீடு ஒன்றின் கூரை சேதமடைந்துள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கட்டைக்காட்டு பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் வீட்டின் கூரையே இவ்வாறு மினி சூறாவளி காரணமாக சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60-104)



(யாழ்ப்பாணம்)

மண்ணுக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர், உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் கௌரவிப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோரினால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை சூடி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (8)

# கசிப்புடன் பெண் கைது

(அராலி)

10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் 42 வயதுடைய பெண் ஒருவர் ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)



(தருமபுரம்)

மண்ணுக்காய் உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி சுண்டுக்குளம் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் வீதி ஊடாக மங்கள வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-316)

# குழந்தையின் நகையை திருடிய சிறிய தந்தை கைது!

(அராலி)

யாழில் குழந்தையின் கையில் இருந்த தங்க ஆபரணத்தை திருடிய சிறிய தந்தை நேற்றைய தினம் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இணுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து குழந்தையின் சிறிய தந்தையான 32 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் போதை பழக்கத்திற்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சியில் 'கார்த்திகை மலரே' இசைப்பாடல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கிட்டு பூங்காவில் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாடு செய்துள்ள 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை "கார்த்திகை மலரே!" என்ற இசைப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இசைப்பாடலை வெளியீடு செய்ய சிரேஷ்ட இசையமைப்பாளர் க. சத்தியன் பெற்றுக்கொண்டார்.

தமிழகத்தின் பாடலாசிரியர் யுகபாரதி எழுதிய 'கார்த்திகை மலரே' மலர்வாயா? எங்கள் காத்திருப்பை நீ அறிவாயா?, கல்லறை சேர்ந்த ஈகியர்கள் கண்ட கனவினைக் கண்ணில் தருவாயா? என்று தொடங்கும் பாடலை ஈழத்தின் பாடகி ஜெயபாரதி பாடியுள்ளார். பூவன் மதீசன் இசையில் உருவான இப்பாடலின் ஒலிப்பதிவை மதிமனு மேற்கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தயாரிப்பான கார்த்திகை மலரே! என்ற இந்த இசைப்பாடலை பாடல் வரிகளில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளாமல் எவரும் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



(நெளுக்குளம்)

மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செல்வி துவாரகாவின் வழிநடத்தலில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மக்களின் ஆதரவுடன் யாழ். மாவட்டம் போராளி விடுதலையின் தலைமையில் யாழ்ப்பாணம் அராலி மத்தி ஊரத்தி அம்மன் ஆலய வளாகத்தில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டு அவர்களுக்கான நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நுங்கு

பனை வெப்ப மண்டலத்தில் வளரும் ஒரு அற்புதமான மரமாகும். பலவகையான பயன்களை நெடுங்காலத்துக்குத் தருவதால் பனையை, கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் என இலக்கியங்கள் கூறும் கற்பகத்தருக்கு ஒப்பிடுவர்.

நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழக்கூடியது. பனை மரம் தான் வளரும் பகுதிகளில் குறிப்பிடத்தக்க கலாசார மதிப்பைக் கொண்டுள்ளது.


பனையின் நுங்கு அவற்றின் மருத்துவப் பண்புகளுக்காக பாரம்பரிய மருத்துவ முறைகளின் பயன்படுத்தப்படுகிறது. வெப்பம், தொடர்பான நோய்களைத் தணிக்கவும், குளிர்ச்சியான பண்புகளையும் இவ் நுங்கு பயன்படுத்துவதால் கிடைக்கின்றது.

அத்துடன் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுதல் மற்றும் உடல் நீரேற்றத்துடன் இருக்க உதவுதல் போன்றவை ஆகும். கோடை காலத்தில் ஏற்படும் வெப்பத்தை தணிக்க நுங்கு உதவுகிறது. செரிமானத்தை மேம்படுத்துகிறது.

நுங்கில் ஊட்டச் சத்துக்களான விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. நீரிழிவு நோயாளிகளுக்குகூட இது ஒரு சிறந்த தேர்வாகும். கோடை வெப்பத்தை தணிக்க இயற்கை தந்த இதமான உணவுப் பொருட்களில் நுங்கு முதன்மையானது. இவை உடல் ஆரோக்கியத்திற்கு பருவ காலத்துக்கு ஏற்ப உடல் நிலையில் உண்டாகும் மாற்றங்களைத் தடுத்து ஆரோக்கியமாக வைத்திருக்க இயற்கையே நமக்கு உதவுகிறது.

அந்த வகையில் கோடை வந்து விட்டாலே உடலுக்கு குளுமை தரும் பொருட்களில் நுங்கு இன்றியமையாததாகிறது. பனை மரத்திலிருந்து பெறப்படும் பனை வெல்லம், கல்லாக்காரம், பனங்கிழங்கு, ஒடியல், பதநீர், பனம்பழம் வரிசையில் நுங்கும் எண்ணற்ற மருத்துவக் குணங்களைக் கொண்டிருக்கக் கூடியது.

எல்லோரும் நுங்கு சாப்பிடும் போது அதன் தோலை நீக்கி உள்ளிருக்கும் சதைப் பகுதியை மட்டும் சாப்பிடுவர். ஆனால் துவர்ப்புச் சுவையாக இருக்கும் நுங்கின் தோல் பகுதிதான் கல்சியம், பொஸ்பரஸ், உயிர்ச்சத்து B, C



போன்றவை கூடுதலாக அடங்கியிருக்கின்றன. எனவே இனி நுங்கை சாப்பிடும் போது தோலோடு சாப்பிடப் பழகுங்கள்.

கோடை காலத்தில் மட்டுமே கிடைக்கும் நுங்கு கோடையால் உண்டாகும் உடல் பிரச்சினைகளைக் களைவதோடு, அதை தீர்க்கவும் பயன்படுகிறது.

கோடையில் வாட்டிவதைக்கும் அம்மை நோய்கள்வராமல் தடுக்க நுங்கு பயன்படுகிறது. இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் எளிதில் சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை போன்ற நோய்களுக்கு உள்ளாவர். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூட தினமும் நுங்கை சாப்பிடுவதன் மூலம் உடல் குளிர்ச்சி அடையும். அம்மைக் கொப்பளங்கள் மீது நுங்கைத் தடவி வருவதால் கொப்பளங்கள் குளிர்ச்சி அடைந்து அரிப்பை உண்டாக்காமல் இருக்கும்.

கோடை தொடங்கும் போதே நுங்கை சாப்பிட்டு வந்தால் அம்மை நோய் பெரும்பாலும் நெருங்காமலும் செய்து விடலாம்.

கோடையில் உடலில் எவ்வளவு நீர் இருந்தாலும் நீர் பற்றாக்குறை உண்டாகும்.

ஐஸ் வோட்டர், செயற்கை குளிர் பானங்கள் எல்லாமே தொண்டைக்கு இதமளித்தாலும் அவை ஆரோக்கியத்தை கெடுக்கவே செய்யும்.

அத்துடன் அனல் காற்று கோடையில் உடலில் படும் போது உடலில் இருக்கும் நீர்ச்சத்து குறைந்து இரத்த ஓட்டத்தில் குறைபாடும் ஹீட் ஸ்ட்ரோக் போன்ற மயக்க நிலை உண்டாகும் வாய்ப்புண்டு.

நுங்கில் சோடியம் மற்றும் பொட்டாசியம் தாதுக்கள் உள்ளதால் இவை நீரிழப்பு அபாயத்திலிருந்து காக்கிறது.

அத்துடன் தாகத்தையும் தணிக்கிறது.

உடல் வெப்பநிலையை சீராக வைத்திருக்க உதவுகிறது. காலையில் வெறும் வயிற்றில் வெது வெதுப்பான நீரைக் குடித்தபிறகு இரண்டு அல்லது மூன்று நுங்குகளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும்.

குடல் இயக்கத்தைச் சீராக செயற்பட வைக்கவும் நுங்கு உதவுகிறது. குடலின் உட்சுவரில் பெரும்பாலும் இரப்பையில் உருவாகும் ஒரு வகைப் புண் அதாவது அல்சரால் அவதிப்படுபவர்கள் நுங்கை கோடை காலத்தில் தினமும் சாப்பிட்டு வருவதால் இவ் உபாதையில் இருந்து விடுபடக் கூடியதாக இருக்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கர்ப்பிணிப் பெண்கள் கூட கர்ப்ப காலத்தின் போது கோடையை சந்தித்தால் தவிர்க்காமல் நுங்கு சாப்பிட வேண்டும். இதனால் கர்ப்ப காலத்தில் ஏற்படும் செரிமானப் பிரச்சினைகள், குமட்டல் உணர்வு, நெஞ்செரிச்சல். அஜீரணக் கோளாறுகள், மலச்சிக்கல் போன்ற வழக்கமான பிரச்சினைகளில் இருந்து விடுபடக்கூடியதாக இருக்கும்.

நுங்கு குறைந்த கலோரிகளைக் கொண்டது. அத்துடன் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாகவும் உள்ளது. நீரிழிவு நோயாளிகளும் அளவாக பயன்படுத்தலாம்.

இவர்களுக்கு இதில் இருக்கும் ஊட்டச் சத்துக்கள் உடலில் குளுக்கோசு அளவை சீராக வைத்து உடலை சோர்வின்றி சுறுசுறுப்பாக வைத்திருக்கவும் செய்கிறது.

இவை நீண்ட நேரம் உங்கள் பசியை ஊக்குவிக்காது ஆனால் நுங்கை பிரித்து எடுத்த சிலமணி நேரங்களில் பயன்படுத்தி விட வேண்டும். நுங்கில் விற்றமின் B, இரும்பு, துத்தநாகம், சோடியம், பொட்டாசியம், பொஸ்பரஸ், கல்சியம் போன்ற ஊட்டச்சத்துக்களோடு குறைந்த கலோரியும் மற்றும் அதிக நீர்ச்சத்தும் இருப்பது நுங்கின் மருத்துவப் பண்புகளுக்குரிய அடிப்படைக் காரணமாகும்.

# இராசிபலன்

24.11.2025,
கார்த்திகை 08 , திங்கட்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 7.09 மணிவரை

பூராடம் முன்னிரவு 8.27 மணிவரை
சுபநேரம் 12.11-1.41 மணிவரை
இராகுகாலம் 7.41-9.11 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-
ரோகிணி, மிருகசீரிடம்
திருவண்ணாமலை கொடி.

வளவன்


மேஷம்

ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ் Wç é còk Vž D, உறவினர்கள் நண்பர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மிதுனம்

அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கூடும், போசன சுகமுண்டு.


சிம்மம்

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.


கன்னி

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


துலாம்

புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


விருச்சிகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


தனுசு

சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.


மகரம்

திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


கும்பம்

அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


மீனம்

வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் நாள்.

மன்னிப்பு என்ற பசையால் எதையும் ஒட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 917



எனக்கு இதனால் சந்தோஷம் உண்டாகும் என்று நீங்கள் எண்ணியிருந்தால் அது பெரும் தவறு! முதன்மந்திரி! எதற்காக நீர் இவ்வளவு பிரயத்தனப்பட்டுக் கோடிக்கரையிலிருந்து இந்தக் காட்டுமிராண்டி ஜன்மத்தைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தீர்? இப்போதாவது உண்மையைச் சொல்லுங்கள்! இனி மேலாவது என்னிடம் எதையும் மறைத்து வைக்க முயல வேண்டாம்!" என்றார்.

அப்போது முதன்மந்திரி அநிருத்தர் உணர்ச்சி ததும்பக் கூறினார்: "ஒரு தடவை செய்த பிழையை மறுபடியும் செய்ய மாட்டேன், இனி எந்தக் காரியத்தையும் தங்களிடமிருந்து மறைத்து வைக்கவும் உடன்படேன். உண்மை வெளிப்பட வேண்டுமென்பதற்காகவே இப்போது இவ்வளவு பிரயத்தனம் எடுத்துக் கொண்டேன். தங்களால் ஒரு பெண்மணி கடலில் விழுந்து இறந்ததாகத் தங்கள் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சம்பவத்தைத் தாங்கள் மறந்து விட்டதாக வெகுகாலம் நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனால் நாளாக ஆக அந்த நினைவு தங்கள் உள்ளத்தின் உள்ளே பதிந்து வேதனையை அதிகப்படுத்திக் கொண்டிருந்ததாக அறிந்தேன். தூக்கத்தில் தாங்கள் அதைப் பற்றிய கனவு கண்டு பல முறை ஓலமிட்டதாக மகாராணி சொன்னார்கள். அதனால் தங்களைக் காட்டிலும் மலையமான் மகளார் அதிக வேதனை அடைந்தார்கள். சில காலத்துக்கு முன்பு என்னிடம் யோசனை கேட்டார்கள். அதன் பேரில் நாங்கள் இந்தப் பிரயத்தனம் செய்யத் தீர்மானித்தோம். தங்கள் காரணமாக இறந்து விட்டதாக தாங்கள் நினைத்து வருந்திய பெண்மணியைத் தங்கள் முன்னாலேயே கொண்டு வந்து நிறுத்தி அந்த எண்ணத்தைப் போக்க உத்தேசித்தோம்.

நேரில் கொண்டு வந்து நிறுத்தினால்தான் தாங்கள் நம்புவீர்கள் என்று எண்ணினோம். இது குற்றமாயிருந்தால் கருணை கூர்ந்து மன்னிக்க வேண்டும்!"

இதைக் கேட்ட சக்கரவர்த்தி ஆத்திரம் பொங்கக் கூறியதாவது: "குற்றந்தான்! பெருங்குற்றம்! இத்தனை நாளும் இவள் பேயாக என்னைச் சுற்றிக் கொண்டிருந்தாள். கனவிலே வந்து கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தாள். பேய்க்குப் பதிலாகப் பிச்சியைக் கொண்டு வந்து என் முன்னால் நிறுத்தியிருக்கிறீர்கள். இது எனக்கு மகிழ்ச்சி தரும் என்று நினைத்தீர்களா?

ஒரு நாளும் இல்லை. என்னிடம் முன்னதாக உண்மையைத் தெரிவித்திருந்தால் இவளை இங்கே அழைத்து வரும் யோசனையைக் கண்டிப்பாக நிராகரித்திருப்பேன். போனது போகட்டும் ஏதோ செய்தது செய்து விட்டீர்கள்.

வெகு கஷ்டப்பட்டு இங்கே இந்த ஊமைப் பைத்தியக்காரியை அழைத்து வந்து சேர்த்தீர்களே? திரும்பி அவளை எப்போது எப்படிப் போகச் செய்வதாக உத்தேசம்?" இவ்வாறு சுந்தர சோழர் கேட்டதும், அநிருத்தர் உண்மையிலேயே பேச்சிழந்து நின்றார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பொது அறிவு இல்லாதவன்



(22.11.2025 அன்றைய தொடர்ச்சி)

அப்போது குளித்து விட்டு வந்த பண்ணையார் மகள், "வந்தவர் யார் எதற்காக வந்தார்?" என்று கேட்டாள்.

"பாடகராம், பாடினால், சன்மானம் பெறலாம் என்று வந்தார், பண்ணையார் யாத்திரை போயிருக்கிறார். அவர் வந்த பிறகு வரலாம் என்று கூறி அனுப்பினேன்" என்றான் மாப்பிள்ளை.

"நம்பிக்கையோடு வந்தவரை வெறுமனே போகச் சொல்வது முறையல்ல, என்று கூறி, பாடகரை வரவழைத்து இசை நிகழ்ச்சி நடத்தும்படி ஏற்பாடு செய்தாள் பண்ணையார் மகள்.

"எனக்கு இசையே தெரியாது, நான் எப்படி சபையில் இருந்து ரசிப்பது?" என்றான் மாப்பிள்ளை.

"அதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு, அவன் குடுமியில் ஒரு நூலைக் கட்டி, அதை தன்கையில் பிடித்துக் கொண்டு, பின்வரிசையில் அவள் இருந்தாள்.

பாடகர் பாடத் தொடங்கினார். உள்ளூர் மக்கள் கூடி இருந்தனர்.

பாடகர் உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தார். பாட்டுக்கு ஏற்றப்படி நூலை ஆட்டிக் கொண்டிருந்தாள் பண்ணையார் மகள்.

அவ்வப்போது, மாப்பிள்ளையின் தலை அசைந்து ஆடியது. "மாப்பிள்ளை நல்ல ரசிகராக இருக்கிறாரே" என்று பாடகர் நினைத்து, மேலும் சிறப்பாகப் பாடிக் கொண்டிருந்தார். திடீரென்று பாடகரைப் பார்த்து, "உம்முடைய பாட்டை நிறுத்தும்!" என்றார் மாப்பிள்ளை.

பாடகர் திடுக்கிட்டார். பாட்டில் - ராகத்தில் ஏதேனும் தவறு நேர்ந்து விட்டதோ என்று குழப்பத்தில் ஆழ்ந்து, பாட்டை நிறுத்தி விட்டு, மாப்பிள்ளையைப் பார்த்தார். "என் குடுமியில் கட்டியிருந்த நூல் அறுந்து விட்டது" என்றான் மாப்பிள்ளை.

பாடகர் உட்பட அனைவருக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

அதன்பின் ஒரு பாடகரைக் கொண்டு, மாப்பிள்ளைக்கு இசைப்பயிற்சி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

ஏழையாக இருப்பது குற்றம் இல்லை, ஆனால் முட்டாளாக இருக்கக் கூடாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம்

## ஸ்கொட்லாந்து முதலமைச்சரிடம் பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்து

**(லண்டன்)........................................**

**இலங்கைவாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும், சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறை ஒன்றின் தேவைப்பாட்டினையும் பிரித்தானியத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் ஸ்கொட்லாந்து முதலமைச்சர் ஜோன் ஸ்வின்னிக்கிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

ஸ்கொட்லாந்தின் முதலமைச்சர் ஜோன் ஸ்வின்னிக்கும் பிரித்தானியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது சுமார் 16 வருடங்களாக நீதிக்காகக் காத்திருக்கும் தமிழ் மக்கள் தற்போது முகங்கொடுத்துவரும் மிக மோசமான நிலவரம் தொடர்பில் பிரித்தானியத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் ஸ்கொட்லாந்து முதலமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

அதுமாத்திரமன்றி சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறை ஒன்றின் தேவைப்பாட்டினையும், இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியுடனான தொடர்புகளைத் தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தமிழ் மக்களுக்கான நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நியாயமான அரசியல் அபிலாஷைகள் என்பவற்றை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்டு ஸ்கொட்லாந்து தேசிய கட்சியுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராக இருப்பதாகவும் பிரித்தானியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (நி)

# சீரற்ற காலநிலையினால் 9 பேர் உயிரிழப்பு



(கொழும்பு)

நாடுமுழுவதும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடரும் மழையுடனான வானிலை காரணமாக பல பிரதேசங்களில் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், சில இடங்களில் வீதிகளில் கற்பாறைகள் சரிந்து வீழ்ந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகக் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதனிடையே 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி, பதுளை, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)


**வேலணை பிரதேச சபை**
**2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் வரைபு பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 24.11.2025 ஆம் திகதி தொடக்கம் 08.12.2025ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் எமது பொது நூலகங்களில் பார்வை இடலாம்.

கருத்துக்கள் எதுவும் இருப்பின் 08.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்கமுடியும் என்பதனை இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

தபால் முகவரி: தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை.
மின்னஞ்சல்: velanaips@gmail.com
தொலைபேசி இல : 021 221 0180 / 021 222 11506

**திரு.சி.அசோக்குமார்,**
**கௌரவ தவிசாளர், வேலணை பிரதேச சபை.** (C-4402)


## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 100 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 220 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 140 | 200 |
| தக்காளி | 260 | 200 | 200 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 150 | 200 | 150 | 120 |
| கோவா | 200 | 150 | 200 | 250 | 180 |
| கரட் | 250 | 220 | 300 | 300 | 220 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 | 50 |
| புடோல் | 200 | 300 | 120 | 300 | -- |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-350 | 200 | 400 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 800 | 800 | 400 | 1200 | 700 |
| வெண்டக்காய் | 180 | 200 | 120 | 300 | 120 |
| கருணைக் கிழங்கு | 200 | 220 | 200 | 250 | -- |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 400 | 350 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 300 | 160 |
| பீற்றூட் | 250 | 160 | 120 | 200 | 180 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 900 | 400 | 1200 | 800 |
| போஞ்சி | 600 | 500 | 400 | 800 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | 120 | 160 | -- |
| கீரை – 1 பிடி | 120 | 60-140 | 80 | 250 | -- |
| தேசிக்காய் | 1200 | 1600 | 600 | 600 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | 600 | -- |
| முள்ளங்கி | 250 | 160 | 150 | 300 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 50 | 60 | -- |
| ஈரப்பலா | 150 | 100-150 | 120 | 150 | -- |

# திருமண பந்தத்தில் இணைந்தார் ஜீவன்



(சென்னை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பாராளு மன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் திருமணம் நேற்று இந்தியாவில் நடைபெற்றது.

இந்தியாவின் திருப்பத்தூர் நகரிலுள்ள திருமண மண்டபத்தில் ஜீவன் தொண்டமான் சீதைஸ்ரீ நாச்சியார் என்பவரை கரம் பிடித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட்

# 100 ஆண்டுகளின் பின் திரும்பிய வரலாறு!

**அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷாஸ் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**



போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் ஹறி ப்ரூக் 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணியின் சார்பில் மிட்செல் ஸ்டார்க் 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையத்து முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 132 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பந்துவீச்சில் பென் ஸ்டொக்ஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து 40 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 164 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில், அவுஸ்திரேலிய அணிக்கு 205 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்தநிலையில் வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ட்ரெவிஸ் ஹெட் விளாசிய அதிரடி சதத்தின் உதவியுடன் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் சார்பில் ட்ரெவிஸ் ஹெட் 83 பந்துகளில் 123 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்படி 1921 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆஷஸ் தொடரொன்றின் போட்டி 2 நாட்களுக்குள் நிறைவிற்கு வந்துள்ளது. இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்டார்க் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் டிசம்பர் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## மே. தீவுகளுக்கு எதிரான தொடரை முழுமையாக வென்ற நியூசிலாந்து



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடியது. முதல் இரு போட்டி முடிவில் நியூசிலாந்து 2-0 என தொடரை கைப்பற்றி விட்டது.

இந்நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த மேற்கிந்திய தீவுகள் அணி 36.2 ஓவரில் 161 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. ரோஸ்டன் சேஸ் 38 ஓட்டங்கள் எடுத்தார்.

நியூசிலாந்து சார்பில் மேட் ஹென்றி 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 162 ஊட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணி 30.3 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக மார்க் சாப்மன் 64 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் நியூசிலாந்து அணி ஒருநாள் தொடரை 3-0 என கைப்பற்றி அசத்தியது. மேட் ஹென்றி ஆட்ட நாயகனாகவும், கைல் ஜேமிசன் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (3)

## முத்தரப்பு ரி - 20 போட்டி இலங்கைக்கு தொடர் தோல்வி!

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் முத்தரப்பு இருபதுக்கு 20 போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில், பாகிஸ்தான் அணி இலங்கையை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது.

ராவல்பிண்டி மைதானத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை அணி, பாகிஸ்தானின் பந்துவீச்சில் தடுமாறியது.

அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஜனித் லியனகே ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை எடுத்தபோதிலும், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது.

அதைத் தொடர்ந்து 129 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சாஹிப்சாதா பர்ஹானின் பொறுப்பான ஆட்டத்தின் உதவியுடன் (80 ஓட்டங்களைப்பெற்று), 15.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி முத்தரப்புத் தொடரில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்ததுடன், இலங்கை அணிக்கு இது தொடர்ச்சியாக இரண்டாவது தோல்வியாகும். (3)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிரந்தரமானவரைப் போல கனவு காணுங்கள்
ஆனால் இன்றே இறப்பவர் போல வாழுங்கள்
– ஜேம்ஸ் டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எதிர்ப்பதுமட்டும்தான் எங்களின் கடமையா?

எதற்கும் எதிர்ப்பு, எதற்கும் விமர்சனம், எதற்கும் தடை, எதிலும் சந்தேகம் என்ற இயல்புகளைக் கொண்ட ஓர் இனம் உய்வுபெறுவதென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

இதை நாம் கூறும்போது அப்படியானால், நாம் எதிர்கக்கூடாதா? என்று யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அதற்கான எமது பதில் தாராளமாக எதிர்க்கலாம். ஆனால் அந்த எதிர்ப்பு காலாகாலமாக ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

அதாவது, அன்று எதிர்த்ததால் இன்று நம் வாழ்வு எவ்வளவு சிறப்பாக உள்ளது என்று நினையுமாறு நிலைமை இருக்க வேண்டும்.

அவ்வாறாயின், எதிர்ப்பதென்று நாம் முடிவு செய்வதற்கு முன்னதாக, அது தொடர்பில் பொது வெளியில் விவாதம் நடத்தப்பட வேண்டும்.

அந்த விவாதம் எதிர்ப்பது என்ற முடிவை ஒரு சிலர் எடுத்துவிட்டு நடத்துவதாக இருக்கக் கூடாது.

மாறாக குறித்த விடயத்தை ஆதரிப்பதா? இல்லையா? அந்த விடயத்தின் சாதக பாதகங்கள் எவை? எனப் பட்டியல்படுத்த வேண்டும்.

தவிர, எதிர்காலத்தில் அதன் தேவைப்பாடு எப்படியாக இருக்கும் என்பது பற்றியும் நாம் ஆராய்ந்த பின்புதான் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து எழுந்தமானமாக ஒரு சிலர் கூடி; முடிவுகளை எடுத்து விட்டு – ஏன்? அவர்கள் எடுத்த முடிவுதான் சரியானதாக இருந்தால்கூட, அந்த முடிவை சம்பந்தப்பட்ட மக்கள் கூடி எடுக்க வேண்டும்.

ஆம், 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அமைக்கும்போது அதைக் கடுமையாக எதிர்த்தவர்களும் இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 1978ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் கொண்டு வந்தபோது அதை எதிர்த்தவர்கள்; மருத்துவபீடத்தை ஆரம்பித்து பேராசிரியர் வித்தியானந்தன் போட்டுடைக்கப் போகிறார் எனக் கூறினார்.

எனினும் துணிச்சலோடு – எங்களின் எதிர்காலம் கருதி பேராசிரியர் வித்தியானந்தன் எடுத்த அந்தத் தீர்மானமே இன்று எங்கள் யாழ்ப்பாண மண்ணில் மருத்துவர்கள் உருவாகக் காரணமாயிற்று.

இதுபோலத்தான் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமை அவசியம். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்ற நோக்கில் 2015ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை உருவாகியது.

ஆ! அதற்கு எத்தனை எதிர்ப்பு. எத்தனை கட்டுரைகள். கருத்துரைப்புகள்.

ஆம், தங்களை முதன்மைப்படுத்தவில்லை அல்லது அது தங்களுக்கு ஆபத்தாக அமையும் என்ற கற்பனை நோயில் உழன்றவர்கள், தமிழ் மக்கள் பேரவையை எதிர்த்து ஒரு மாதிரியாக அதன் மூச்சை அடக்கி நிறுத்தினர்.

ஆனால், இன்று தமிழ் மக்கள் பேரவை இல்லாது போனமை எங்கள் ஒற்றுமைக்கு ஏற்பட்ட இழப்பு என்று கூறுமளவுக்கு நிலைமை ஆயிற்று.

அதிலும் பேரவையை எதிர்த்தவர்களே அவ்வாறு கூறுகின்றார்களெனில் எங்களின் எதிர்ப்பின் நோக்கம் – அதன் அர்த்தம் – அதன் விளைவு எத்தகையதென்பது உணர்தற்குரியது.

ஆக, எல்லாவற்றையும் எதிர்ப்பது என்றில்லாமல், காலசூழ்நிலைக்கேற்ப தீர்மானங்களை எடுப்பதிலேயே எங்களின் எதிர்காலம் தங்கியுள்ளது என்ற உண்மையை, சுயநலம் என்ற சிந்தையை அறவே துறந்து ஏற்றிடல் வேண்டும்.

## ஊடக அடக்குமுறைகளுக்கு உரிய நீதி கிட்ட வேண்டும்

### ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

போர்க்காலத்தில் இடம்பெற்ற ஊடகப் படுகொலைகள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகளுக்கு இந்த அரசு நீதியைப் பெறுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில், பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் வெளியிடுகையில், போர்க்காலத்தில் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடகநிறுவனங்கள் மீதான தாக்குதல் என்பன தொடர்பில் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் ஊடகங்களின் சுதந்திரமும் சுயாதீனத்தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ந-7)

## நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு மருந்துகளை விற்றால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையை விட அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்வோர் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள்து.

முன்னதாக, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் 350 மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இந்தநிலையில் குறித்த மருந்துகளை அதிக விலைக்கு விற்பனை செய்யும் எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனம் தொடர்பில், அதிகார சபையிடம்முறையிடுமாறு பொது மக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ந-7)

## விசேட பேருந்து சேவை இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் காரைநகர் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு 782 வழித்தடப் பேருந்து சேவையில் புதிய இணைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கொழும்பு - காரைநகர் இடையே போக்குவரத்தில் ஈடுபடும் அரச பேருந்து கொழும்பில் இருந்து புறப்பட்டு அதிகாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்குச் சென்று அங்குள்ள பயணிகளை ஏற்றியவாறு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு வரும். பின்னர் அங்கிருந்து காலை 5.50 மணிக்கு வழமை போல் காரைநகர் நோக்கி போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும்.

அதேபோல மாலை 6.20 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்குச் சென்று அங்குள்ள பயணிகளை ஏற்றியவாறு காரைநகர் நோக்கி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் என காரைநகர் போக்குவரத்துச் சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச்சேவையானது இன்று முதல் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,104)

## ரணிலின் பிரிட்டன் விஜயம் 50 பேரிடம் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகப் பிரித்தானியப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த போது, 16.6 மில்லியன் ரூபா அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதுவரை 50 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணையின் ஒரு பகுதியாக பிரித்தானியாவில் தற்போதுள்ள பொலிஸ் குழு, லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் நான்கு ஊழியர்களிடமும் இந்த வாரம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளது.

இந்தக் குழு இன்று இலங்கைக்குத் திரும்பவுள்ளதுடன் நாடு திரும்பியவுடன் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்று சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்கவைச் சந்தித்து, தமது சேவைப்பெறுநர் மீதான விசாரணையின் முன்னேற்றம் குறித்து விசாரித்தது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் குழு பிரித்தானியாவிலிருந்து திரும்பிய பின்னரே விசாரணையின் முன்னேற்றம் குறித்து மேலும் தெளிவுபடுத்த முடியும் என்று சட்டமா அதிபர் அவர்களிடம் தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (ந-7)

## கஞ்சாச் செடி வளர்த்தவர் கைது

(நுகேவெவ)

லுனுகம்வெஹெர - நுகேவெவ பகுதியில் சுமார் 1/4 ஏக்கர் பரப்பளவில் வளர்க்கப்பட்ட 5 ஆயிரத்து 363 கஞ்சாச் செடிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


சந்தேகநபர் தேவ்ரம் வெஹெர - தனமல்வில பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

லுனுகம்வெஹெர பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025
“நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களிலிருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் சிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளன.”
இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

07

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அச்சங்கத்தின் தலைவியாக இருந்த அக்னஸ் டீ சில்வாவே, இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் என்று கூறப்படுகிறது.

பெண்கள் வாக்குரிமைச் சங்கம் சாட்சியமளிப்பதற்கு முன்பாக, 1927 டிசம்பர் 20ஆம் நாள் சாட்சியமளிப்பதற்காகச் சேர். பொன். இரா மநாதன் அழைக்கப்பட்டிருந்தார். தன் சாட்சியத்தின் போது கீழ்க்கண்டவாறு அவர் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

“நீங்கள் எங்கள் பெண்களை அவர்கள் பாட்டில் இருக்க விடுங்கள். கடவுளின் விருப்பப்படி அவர்கள் இந்த உலகத்தில் கீழானவர்களாக உள்ளமை எதற்காக என்பது பற்றி நீங்கள் அறிய நியாயம் இல்லை. பெண்களது முழு வாழ்க்கையும் அவர்களது கவனமும் வீட்டிலேயே இருக்க வேண்டும். அதற் கப்பாலான ஒரு உலகம் இல்லை. வீட்டுப் பொறுப்பிற்கப்பால் அவர்கள் செல்வதற்கு இடம் கொடுக்க வேண்டாம்.”

எவ்வாறாயினும் 1928 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசு இலங்கைப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுமே வாக்களிக்கலாம் என டொனமூர் திருத்தம் தெரிவித்தது. பெரும்பான்மையான ஆண்களும் இலங்கை காங்கிரஸ் கட்சியைத் சேர்ந்தோரும் பெண்கள் வாக்குரிமை பெறுவதை எதிர்த்ததாலேயே பெண்களின் வயதெல்லை 30 ஆக உயர்த்தப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்ட நாடுகள் சிலவற்றில் கல்வியறிவு பெற்ற, வசதி படைத்த பெண்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்த போதும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் வாக்களிக்கலாம் என்ற உரிமையைப் பெற்ற (பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்ட) முதல் நாடு இலங்கையே. பின்னர் புதிய அரசியலமைப்பு அரச சபையில் நிறைவேறும் போது பெண்களின் வாக்குரிமை வயதெல்லை வயது 30 இலிருந்து 21 ஆக மாற்றப்பட்டது. (ஆண்களுக்கு வழங்கப்பட்டது போலவே).

டொனமூர் திட்டம் பற்றிய சட்டசபை விவாதத்தில் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்று சிங்களத் தலைவர்கள் பலர் கடுமையாக வாதிட்டனர். இறுதியில் இந்திய வம்சாவளியினர் வாக்குரிமை பெறுவதற்கென்று சில மேலதிக தகுதிகள் கட்டாயமாக்கப்பட்டன. சட்ட பூர்வமான நிரந்தரக் குடியுரிமைச் சான்றிதழ், எழுத்தறிவு, சொத்து, வருமானத் தகுதி என நிபந்தனைகள் விதிக்கப்பட்டதில் ஏறத்தாழ ஒரு இலட்சம் இந்தியர்கள் மாத்திரமே வாக்குரிமைக்கு தகுதி பெற்றனர். இந்த சிங்களத் தலைவர்களுடன் சமரசம் செய்து தான் அந்த வாக்குரிமை கிடைத்தது.

1931 ஏப்ரல் 15 அன்று, புதிய அரச சபை பற்றிய கட்டளைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. சட்டமன்றம் 1931 ஏப்ரல் 17இல் அதுவரையான அரச சபை கலைக்கப்பட்டது. மே 04 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சர்வஜன வாக்குரிமையின்படி முதல் பொதுத் தேர்தல் 1931 ஜூன் மாதம் 13இலிருந்து 20 வரையான ஒரு வார காலம் நடைபெற்றது.

இத் தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள வேட்பாளர்களுக்கு வெவ்வேறு வர்ணங்கள் வழங்கப்பட்டன. வேட்பாளர்களுக்கு உரிய அந்தந்த நிறங்களில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். வாக்காளர்கள் தாம் விரும்பிய வேட்பாளருக்கு உரிய நிறத்தைக் கொண்ட வாக்குப் பெட்டியில் வாக்கை அளிப்பர்.

புதிய அரசியலமைப்பின் கீழ் நடத்தப்பட்ட இத் தேர்தலில், மூன்று பெண்கள் முன்னிலையாகினர். 1931 ஆம் ஆண்டு அரச சபைக்கு, அவர்களில் இருவர் தெரிவு செய்யப்பட்டு, மக்கள் பிரதிநிதிகளாக வரம் பெற்றனர்.

இப்படியெல்லாம் எதிர் கொண்டு கடுமையாகப் போராடித் தான் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொண்டார்கள். ஆங்கிலேய குடியேற்ற நாடுகளில் முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட நாடு இலங்கை. அப்போது ஐரோப்பாவில் கூட பல நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் பட்டிருக்கவில்லை.

இலங்கைக்கென இத்தகைய வரலாறு இருந்தும் கூட, இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 9.7 சதவீதத்தை இதுவரை தாண்டியதில்லை. 19 நாடாளுமன்றங்களைத் தாண்டிய, இலங்கை அரசியல் வரலாற்றில், இதுவரை 150க்கு குறைந்த பெண்களே நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளனர்.

உலகில், பெண் பிரதிநித்துவத்தை அதிகம் கொண்ட நாடாக ருவண்டா விளங்குகிறது. ருவண்டா நாடாளுமன்றத்தின் கீழ்சபைக்கு 63.8 சதவீதமான பெண்கள் தெரிவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

1931 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது அரச சபைத் தேர்தலில் பலாங்கொடைத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை லீலாவதி அசரப்பா தாக்கல் செய்திருந்தார். இவர் இந்திய வம்சாவளிப் பிராமணப் பெண். கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரியான டாக்டர் சி. வி. அசரப்பாவின் மனைவி.

பலாங்கொடைத் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்த மற்றொரு வேட்பாளர் ஜே. சி. ரத்வத்தை. இவர் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தந்தையாரான பார்ன்ஸ் ரத்வத்தையின் ச்கோதரர்.

வேட்புமனு தாக்கல் செய்த போதிலும் லீலாவதி அசரப்பா ஆரம்ப கட்டத்திலேயே போட்டியிலிருந்து விலகினார். பலாங்கொடையில் ரத்வத்தை குடும்பத்தினருக்கு மிகுந்த செல்வாக்கு இருப்பதை அறிய வந்ததாகவும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை எதிர்த்துத் தன்னால் போட்டியிட முடியாதென்பதால் விலகியதாகவும் பத்திரிகையாளர்களுக்கு அவர் கூறினார்.

### முதலாவது அரச சபையில் (State Council) முதல் பெண் -1931

சர்வஜன வாக்குரிமையின்படி முதல் பொதுத் தேர்தல் ஜூன் 1931 இல் நடைபெற்றது. அத் தேர்தலில் ருவன்வெல்ல தொகுதியில் ஜே.எச். மீதெனிய அதிகாரம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இருந்தாலும் , மீதெனியா அதிகாரம் அரச சபை (State Council) உறுப்பினராக சில மாதங்கள் மட்டுமே தான் அங்கத்தவராக இருக்க முடிந்தது. அவர் செப்டம்பர் 5, 1931 அன்று திடீரென இறந்தார். இதன் விளைவாக இடைத் தேர்தல் நடத்தி அந்த வெற்றிடத்தை நிரப்ப வேண்டியேற்பட்டது.

மீதெனிய அதிகாரத்தின் நெருங்கிய நண்பர்கள் மீதெனிய அதிகாரத்தின் மகள் அடெலின் மொலமுரே குமாரி ஹாமியிடம் இடைத் தேர்தலில் போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

மேற்படி வேண்டுகோளுக்கிணங்க அடெலின் மொலமுரே இடைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை 1931 ஒக்டோபர் 5ஆம் திகதி சமர்ப்பித்தார். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதன் முறையாக பெண் ணொருவர் போட்டியிடுகின்றமையால் அவரின் வெற்றிக்காக பெண்கள் வாக்குரிமைச் சங்கம் பெரும் பிரச்சார வேலைகளை மேற்கொண்டது. இத்தேர்தலில் அடெலின் 9398 அதிகப்படியான வாக்குகளால் வென்றார். இலங்கை தேசிய காங்கிரஸின் முக்கிய அரசியல் பிரமுகரான ஆ.எஸ்.எஸ். குணவர்த்தனவை இத்தேர்தலில் 9000க்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வென்றார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின் திருமதி. அடெலின் மொலமூரேவுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வந்தவர்கள் மத்தியில் உறையாற்றிய அடெலின் பின்வருமாறு தெரிவித்தார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் மழை...

வாகும் சாத்தியக்கூறுகள் நிலவுவ தாகவும் அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## புலனாய்வுப்...

மாவட்டப் புலனாய்வு அதிகாரிகள், அந்தந்த மாகாணங்களில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள், அந்தந்த பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் வரும் கப்பல்களில் கைமாற்றப்படும் போதைப் பொருட்களை மீனவர்கள் கொண்டு செல்வதாகக் கிடைக்கப் பெறும் புலனாய்வுத் தகவல்கள் காரணமாக, பொதுப் பாதுகாப்பு அமைச்சு இந்த விரிவான பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், இந்தப் பாரிய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அந்தந்த மாகாணங்களில் உள்ள பொது மக்களிடமும் பொலிஸார் உதவியை கோரியுள்ளனர்.

மீன்பிடி படகு உரிமையாளர்களும் இந்தப் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-7)

## உயர்தரப்...

இந்த வினாத்தாள் கசிவு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பரீட்சைகள் திணைக்களம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த வாரம் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பொருளியல் விஞ்ஞான வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக சமூக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் விசாரணையை நடத்தியுள்ளது.

இதன்போது பரீட்சை வினாத்தாள் கசிவானமை தொடர்பில் அல்லது முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் எவ்விதத் தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் உரிய விசாரணை நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஓரங்கமாகவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)

## 529 மாவீரர்...

தாயகக் கனவுடன் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு 529 மாவீரர்களின் புகைப் படங்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய மாவீரர் நினைவாலயம் புதுக்குடியிருப்புப் பேருந்து நிலைய வளாகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த மாவீரர் மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மாவீரர்களின் தாயார் ஒருவர் நாடாவினை வெட்டி திறந்துவைத்துள்ளதைத் தொடர்ந்து சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு உறவினர்கள் பொதுமக்கள் பெற்றோர்கள் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர்.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தி.கிந்துஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் கொள்கைப் பரப்பு செயலாளர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் அ.சுயாத்தன் பிரசாத், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் நவநீதன் உள்ளிட்டவர்களும் மாவீரர்களின் பெற்றோர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குறித்த நினைவாலயமானது மாவீரர் நாளான 27ஆம் திகதி பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் திறந்திருக்கும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ந-7)

## நீண்டகாலம்...

அரசாங்கம் தயாராகியுள்ளது.

அதன்படி புதிய சட்டமூலத்தை அடுத்த மாதம் அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அமையாது.

எனினும் நீண்டகாலமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக, அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை வழங்கும் வகையில் புதிய சட்டமூலம் அமையவுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சந்தேகநபர்களை நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யும் வகையில் புதிய சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ந-7)

## பேரா...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பொறியியல் துறைப் பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் நேற்று (23) காலமானார்.

அவரின் மறைவு யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கும் கல்விச் சமூகத்துக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணியளவில் மணல்தறை வீதி, கந்தர்மடத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து பூதவுடல் யாழ்.பல்கலைக்கழகத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். (ந-7)

## தாயகம் எங்கும்...

தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மையே அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவேந்தல் வாரம் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தாயகக் கனவில் ஆகுதியான தம் உறவுகளை மக்கள் மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவாலயங்கள் அமைத்தும் தத்தமது பிரதேச மையப் பகுதியில் ஈகச் சுடரேற்றியும் உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

அத்துடன் நல்லூர் நினைவாலயம் உள்ளிட்ட மாவீரர் நினைவாலயங்கள் மாவீரர்களின் நோக்கை, தியாகத்தை இளைய தலைமுறையினருக்கு அறியப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 6022
S 8 6 4 9 0 7

அத சம்பத
S 4 9 0 7
சீட்டிழுப்பு இலக்கம் 0597

சுப தவசக்
திகதி 2025.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 0138
மகரம் 12 46 50
3887

தன நிதானய
திகதி - 2025.11.23
சீட்டிழுப்பு இலக்கம் - 2052
H 03 37 50 73 H

மெகா பவர்
திகதி 23/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2370
K 12 39 43 47 52

ஜய
திகதி 2025.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 0290
S 6 9 9 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4264
சீட்டிழுப்பு திகதி 23.11.2025
D 01 17 43 45
D

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 1331
தனுசு 11 38 50 51 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.11.2025 வெற்றி வாரம் 0730
ஆங்கில எழுத்து 0
மற்றும் வெற்றி இலக்கம் 4 3 7 3 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29.293.646.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2996
சீட்டிழுப்பு திகதி 2025.11.23
தினம் ஞாயிற்றுக்கிழமை
41 56 69 78 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,308,076.00
DLB

சனிதா
திகதி 23.11.2025 வெற்றி வாரம் 5157
07 20 39 53 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,960,275.60
DLB

சசிரி
வெற்றி வாரம் 826
சீட்டிழுப்பு திகதி 23.11.2025
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 32 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4708
சீட்டிழுப்பு திகதி 23.11.2025
தினம் ஞாயிற்றுக்கிழமை
07 31 41 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,415,333.20
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 01 02 08 20 56
2172
23.11.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.609,288,150.60
DLB

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2822
சீட்டிழுப்பு திகதி 2025.11.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,647,946.40
18 33 51 56 X
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4404)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

01.சாவகச்சேரி, இந்து, 1990, திருவோணம், BBM, B.Eng. Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02.வல்வெட்டி, இந்து, 1983, மூலம், Electrical Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
03.பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
04.மூளாய் - பலாலி, இந்து, 1983, உத்திராடம், A/L, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
05.வல்வெட்டித்துறை, இந்து, 1992, அவிட்டம், BSc UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
06.உடுப்பிட்டி, இந்து, 1990, அவிட்டம், BSc Engineering, New zealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
07.அளவெட்டி, இந்து, 1984, திருவோணம், BSc Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
08.அச்சுவேலி, இந்து, 1986, அனுசம், Administrative Professional, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09.கந்தர்மடம், இந்து, 1989, உத்திராடம், MSc, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5973)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



## மணமகள் தேவை

1978, கேட்டை நட்சத்திரம், 11 சூரியன், செவ்வாய் உடைய திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு :
076 007 8009 (6007)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# ரில்வினுக்கு எதிராக பிரிட்டனில் போராட்டம்



(லண்டன்)

மக்கள் விடுதலை முன்ன ணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் பிரிட்டன் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் போராட்டங்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ரில்வின் சில்வா நேற்று பிரித்தானியாவிற்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள நிலையிலேயே அங்கு அவரது வருகைக்கான எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ந-7)


## வேலைவாய்ப்பு

♦ கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்
(பெண்கள் – பகல் கடமை
ஆண்கள் – இரவுக் கடமை)

♦ உதவி ஆசிரியர்கள்
(இரு பாலாரும்)
தகைமை : க.பொ.த உயர்தரம்

யாழ். நகருக்கு அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு :
076 097 3121, 021 222 3378

வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பொது முகாமையாளர்


# வாகன விபத்து ஒருவர் மரணம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய வீதியின் உடவளவப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்று பேருந்துடன் மோதியதாலேயே இவ் விபத்து சம்பவித்ததுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த படல்கும்பர, மூனகம பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான காரின் சாரதி, எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)


## மரண அறிவித்தல்

மலர்வு
25 - 04 - 1958

உதிர்வு
22 - 11 - 2025



### திருமதி சிவசந்திரன் தவமணி

பளை நகரம் பளையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசந்திரன் தவமணி அவர்கள் கடந்த 22.11.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புக்குட்டி - தையலம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவசந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் அகீபன்(தம்புக்குட்டி பல்பொருள் வாணிபம், பளை), சாமந்தி(Panasia Bank - Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மராசா(சாவகச்சேரி), தம்பித்துரை (அமெரிக்கா), திலகவதி (கனடா), தனபாலசிங்கம்(கனடா), தவராசா (கனடா), ரேவதி (ஆசிரியர் - கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பவானி, லீலா, பூமணி, அர்ச்சினி, சிவசுந்தரராசா, முரளிதரன் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனியும் சசிக்கா, சியான், கயானி, கேசிகன்(கிளி/பளை மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்), குகறாம்(பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட 3 ம் வருட மாணவன்) ஆகியோரின் பெரியம்மாவும் தனுசா, தேனுகா, சோபனா, பபினேஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.11.2025 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் மலையான்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 361 7519
076 480 0976
(C-4403)

தகவல்:
குடும்பத்தினர்



## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Wealth Planner | 0755195745 |
| Branch Manager | 0778892934 |
| Medicine Store Assistant | 0752217661 |
| Technical Support Work | 0779232432 |
| Development Manager | 0778892934 |
| Marketing Manager | 0777251269 |
| Online Sales Assistant | 0767042891 |
| Photo,Video Grapher | 0770280224 |
| சிற்றுண்டி தயாரிப்பவர் | 0779271122 |
| Vehicle Service Boy | 0774121100 |
| Cleaning Staff | 0762240110 |
| Sales Assistant /Designer | 0755113680 |
| Security(info@royalfolurmills.com) | 0761526845 |
| Fort light Vehicle Driver | 0714952751 |
| Video Editing | 0776040400 |
| Granite & Tile Workers | 0772025118 |
| Leasing Officer | 0755489898 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com
வேலையாட்கள் தேவையா?
0760984532 (9665)
DEWMAS, 51, Amman Road, Nallur



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4405)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3580/- |
| 11-16 Kg | 2610/- |
| 21-22 Kg | 2380/- |

✔ குறைந்த விலை -நிறைந்த சேவை
✔ கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
✔ 14 நாட்களில் Delivery (C-4405)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org